JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 73 / 2021 |
| | : | Prosecution P .W - 1 |
| NAME | : | முருகன் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 30.03.2023

முதல் விசாரணை

நான் தற்போது பாவூர்சத்திரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் மெடிக்கல் ஸ்டோர் வைத்து தொழில் செய்து வருகிறேன். கடந்த 26.12.2016 ம் தேதி நான் விருதுநருக்கு சென்றுவிட்டு 28.12.2016 ம் தேதி மதியம் 01.00 மணிக்கு வீட்டிற்கு வந்து பார்த்தபோது என் வீட்டின் முன் கதவு தாழ்பால் கம்பியை வைத்து வளைத்து கதவு திறந்திருந்தது உள்ளே சென்று பார்த்தபோது படுக்கை அறையில் இருந்த பிளைவுட்டால் செய்யப்பட்ட Rack ல் திறந்திருந்தது அதில் பார்த்தபோது நான் வைத்திருந்த 10 கிராம் தங்கசெயின் திருடுபோயிருந்தது. அதன் மதிப்பு ரூ.30,000 இருக்கும். நான் பாவூர்சத்திரம் காவல் நிலையத்தில் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் நான் கொடுத்தது தான். அந்த புகார் அ-சா.ஆ 1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. அதற்கு பிறகு காவல்நிலையத்திலிருந்து செயின் கிடைத்துவிட்டதாக தகவல் சொன்னார்கள்.

காவல் நிலையம் சென்று செயினை அடையாளம் காட்டினேன்., ஆஜர் எதிரி களிடம் இருந்து செயின் கைப்பற்றப்பட்டதாக போலிசார் தெரிவித்தார்கள். ஆஜர் எதிரிகளை நான் காவல் நிலையத்தில் பார்த்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் செயின்தான் திருடப்பட்டு, மீட்கப்பட்டு, நான் இடைக்காலமாக பெற்றுக்கொண்ட செயின் ஆகும். செயின் இருக்கும் போட்டோ அ.சாபொ. 1 ஆகவும், CD அ.சா.பொ. 2 ஆகவும் குறியீடுசெய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் கு.வி

போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நடக்காத சம்பவத்திற்கு பொய் புகாரிற்கு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன், என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல். நான் காவல் நிலையத்தில் எதிரிகளை பார்க்காமல் தற்போது காவல் நிலையத்தில் பார்த்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

//Sd// - முருகன்

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tr.M.Ponpandi
Judicial Magistrate,
Tenkasi